**செய்தி வெளியீடு எண்: 09/2026** **நாள்: 26.01.2026**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் 77-வது குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது**

சென்னை, நந்தனதில் உள்ள சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகமான மெட்ரோஸில் 77-வது குடியரசு தின விழா இன்று (26.01.2026) நடைபெற்றது. இவ்விழாவில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரும் / கூடுதல் தலைமைச் செயலாளருமான திரு.மு.அ.சித்திக், இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

பின்னர், சுதந்திர தின விழா கொண்டாட்டத்தின் போது சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் 10 ஆண்டுகளுக்கு மேல் சிறப்பாக பணிபுரிந்த 25 அலுவலர்களுக்கு மற்றும் புது வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையத்தில் பணியாற்றும் ஆறு (6) திருநங்கை ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு (TOM operators), மெட்ரோவின் பணிக்குழுவில் அவர்களின் பங்களிப்பைப் பாராட்டி, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் நினைவுப் பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்.

குடியரசு தின விழாவை முன்னிட்டு, அரசுப் பள்ளி மாணவர்களிடையே விளையாட்டு ஆர்வத்தை வளர்க்கும் விதமாக "சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் விளையாட்டு போட்டிகள் 2025-26" நிகழ்வை ஏற்பாடு செய்தது. இதில் சைதாப்பேட்டை, திடீர் நகர் சென்னை நடுநிலைப் பள்ளி மற்றும் மேட்டுப்பாளையம் சென்னை நடுநிலைப் பள்ளி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் ஓட்டம், தொடரோட்டம் (Relay), சதுரங்கம், பேட்மிண்டன், வாலிபால் மற்றும் கோ-கோ உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் மிகுந்த உற்சாகத்துடன் பங்கேற்றனர். மாணவர்களின் திறமையைப் பாராட்டும் விதமாக, வெற்றி பெற்ற 76 மாணவர்களுக்கு, குடியரசு தின விழாவின் போது சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்கள் பாராட்டுச் சான்றிதழ்களையும் பரிசுகளையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் திரு. தி. அர்ச்சுனன் (திட்டங்கள்), திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி (நிதி), திரு. மனோஜ் கோயல், (அமைப்புகள் மற்றும் இயக்கம்), முதன்மை பாதுகாப்பு அதிகாரி எச்.ஜெயலக்ஷ்மி, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் பொது ஆலோசக நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்றனர்.

**வெளியீடு: மக்கள் தொடர்பு துறை,**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**